
# இளஞ்சூரியன்

தை-மாசி-பங்குனி 2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தம் உயிரெனும் உளிகொண்டு
தமிழீழத்தைச் செதுக்கிடும் பணியில்
களமாடி உயிர்நீத்த ஒப்பற்ற
தியாகிகளான மாவீரர்களுக்கும்,
தமிழீழ விடுதலைக்காக
உயிரீந்த தமிழீழ உறவுகளுக்கும்
,,சுனாமி,, கடல்-பூகம்பத்துக்கு
இரையான தமிழீழ உறவுகளுக்கும்
இளஞ்சூரியனைச் சிரந்தாழ்த்திச்
சமர்ப்பணம் செய்து,எமது எழுத்துலகப்
பயணத்தை ஆரம்பிக்கின்றோம்.

**இளஞ்சூரியன் படைப்பாளிகள் அகம்**
**சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்**
**யேர்மனி**
**தை 2005**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய இளந்தலைமுறையினரின் இளஞ்சூரியன் படைப்பாளிகள் அகத்தின் இன்றே....இப்பொழுதே என்ற கோட்பாட்டுக்கமைய துரித செயல்பாடாக இளஞ்சூரியன் சஞ்சிகை வெளிவருகின்றது.தங்களது ஆளுமையை வளர்த்தெடுத்து தங்களை எழுத்துலகப் படைப்பாளிகளாக்கும் வளர்ச்சிக்கு அனைவரி னதும் ஒத்துழைப்பையும், சிறந்த ஆக்கபூர்வமான விமர்சனத்தையும் அவர்களுக்கு வழங்குமாறு அன்பாக வேண்டுகிறோம்**

சஞ்சிகையின் ஆக்கங்கள் பற்றிய மேற்பார்வைக்கும் நிர்வாகத்துக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Eelaija Murugathasan (பொறுப்பாளர்)
Bromberger Str.8
46145 Oberhausen
Tel:0208 607635

# வணக்கம்

இளஞ்சூரியன் படைப்பாளிகள் அகமாகிய நாம், கதை,கவிதை,கட்டுரை மற்றும் ஊடகத்துறையில் புலம்பெயர் இளந்தலைமுறையினரின் எழுத்தாற்றலையும்,அதற்கான ஆளுமையையும் வளர்த்தெடுப்பதற்காக இளஞ்சூரியன் என்ற சஞ்சிகையை வெளியீடு செய்கின்றோம்..மூன்று மாதத்திற்கு ஒரு முறை இச்சஞ்சிகை வெளிவரும்..இளஞ்சூரியன் சஞ்சிகைக்கு ஆக்கங்களை அனுப்பி வைப்பதுடன் நேர்மையான விமர்சனங்களையும் வழங்குமாறு வேண்டுகிறோம்.

**ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி**

ILANCHURIYAN
POSTFACH 1132
52441 LINNICH

**சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய இளஞ்சூரியன் படைப்பாளிகள் அகத்துக்கும் இளஞ்சூரியன் சஞ்சிகைக்கும், ஒத்துழைப்பு நல்கி வரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் யேர்மனிக்கிளைப் பொறுப்பாளருக்கும்,பணியகத்தினருக்கும் எமது பணிவன்பான நன்றிகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசியத்தலைவரின் சிந்தனையிலிருந்து

எனது இயக்கம் பற்றியும் எனது மக்கள் பற்றியும் எனது தேசம் பற்றியும் நான் பெருமை கொள்கிறேன்.
அறப்போரிலும் சரி ஆயுதப் போரிலும் சரி, எமது விடுதலைப் போர் உலகசாதனைகளைப் படைத்து வருகின்றது. மனித ஈகத்தின் சிகரத்தை எட்டியிருக்கிறது.

ஒரு விடுதலைப் போராளியானவன் தனது சுயத்தின் வரம்புகளுக்கு அப்பால் மேலோங்கித் தன்னை முழுமையாகப் போராட்டத்துக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்! நாடு பெரிதானால் நாம் எல்லோரும் அதற்குச் சிறியவர்களே. எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.

நாம் துணிந்து போராடுவோம். சத்தியம் எமக்குச் சாட்சியாக நிற்கிறது : வரலாறு எமக்கு வழிகாட்டியாக நிற்கிறது.

சுதந்திரம் இல்லாத மனித வாழ்வில் அர்த்தமே இல்லை.

உழைக்கும் மக்களின் உழைப்புச் சக்தியே ஒரு தேசத்தின் ஜீவாதார சக்தியாகும்.

சுதந்திர எழுச்சியின் உந்துதலாற் தான் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கிறது.

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சிகொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளஞ்சூரியர் எம் சூரியர்

சிறிஸ்கந்தராஜா குடும்பம்

உதயமாகிவிட்ட இளஞ்சூரியன்
இருளில் கிடந்த பூமிக்கு ஒளிதர
எழுந்து வரும் சூரியன்
இளஞ்சிவப்பு மஞ்சள் கதிர்களால்
எம்மை வருடவரும் சூரியன்
தூங்கிக் கிடந்த உலகைத் தட்டி
எழுப்ப வந்துவிட்ட சூரியன்

இனி இளம் தலைமுறைக்கு
இனம் காட்ட புறப்பட்ட சூரியன்
தாயக விடுதலையை தாரக மந்திரமாய்
தலைவன் வழியில் தடம் பதிக்க
தலை நிமிர்ந்த சூரியன்

அன்று உங்கள் எண்ண அரங்கம் கண்டோம்
மூடிக்கிடந்த பழைமைக் கதவை அடித்து நொறுக்கி நின்றீர்கள்!
மடமைப் பிசாசுகளை இடித்து விரட்டி நின்றீர்கள்!
எண்ணங்களால் உயர்ந்து நின்றீர்கள்!

புதிய நீதி எழுதுங்கள் அதையும் நிமிர்ந்து பார்த்து எழுதுங்கள்
குனிந்து எழுதிய நீதிகளால் நாம் பட்டது போதும்
எங்கள் கல்வி மூலதனத்தை அழித்தவர்களை
இனி அழிக்க நினைப்பவர்களை
உங்கள் கல்வியால் குழிவெட்டிப் புதையுங்கள்

எங்கள் சூரியப் புதல்வன் எண்ணம் போல் சிந்தனை போல்
மாவீரர்கள் தியாகம் போல் உங்கள் வண்ணங்கள் சிறகடித்து
சரித்திரங்கள் படைக்கட்டும் தமிழீழம் பலம் பெருகட்டும்
நாம் வைத்த பனை,தென்னை,மாமரங்கள்
இன்று பூத்து நிற்கின்றன-மணம் பூரித்து நிற்கின்றோம்
நாளை எம் சந்ததிக்கு பயன் தரும் என்ற நம்பிக்கையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுச கைகோர்ப்பு நாளிது

திருமதி கோசல்யா சொர்ணலிங்கம்

களத்திலும் நாங்களில்லை களமேட்டிலும் நாங்களில்லை
சூரியப் பொழுதுமில்லை சுடரொளி வீச்சுமில்லை
ஆயினும் ஆண்டாண்டாக சூரிய பொங்கலிதை
பனிப்புலத்திலும் பொங்கி வந்தோம்

ஆசியக் கரையோரம் அவலத்தில் சிக்கவில்லை
அலைகளில் அள்ளுண்டு அழிவினில் சேரவில்லை
ஆயினும் மானுசர்களாக ஐரோப்பிய வெளியில்-அந்த
ஆதங்க அவல உணர்விலே பொங்கி நின்றோம்

உணர்வினைப் பலப்படுத்த உள்ளுணர்வினை வலுப்படுத்த
இளம் சூரியர் கையெடுப்பில் எழுச்சியில் பொங்குகவே
ஆதவன் பொங்கல் காண அடிவானம் தள்ளி வந்தான்
மாயவன் மறுபடி புரண்டு படையலைப் புசிக்க வந்தான்

நிலத்தினை உழுதவரும் கடல் வளத்தினை உழுதவரும்
விருப்பினில் படையல் போட கரித்தது பொங்கலது
கவிகளைப் படையலாக்க கனத்தது முத்தமிழ்-இனி
படைப்பினை இளம்தலைமுறை கையில் தந்தோம்

பூமியின் பிறப்பு மானுட சடங்கின் அப்பால்-இந்த
மனிதத்தின் முழுமையோ மாந்தரின் முன்னெடுப்பிலே
மாணவர் சேவை இந்த விளைச்சலை வியந்து-ஓம்
அறுவடையாகக் காண்கில் ஆசிரியம் அகமகிழ்ந்தே பொங்கும்

**மகிழ்ச்சிகரமான வாழ்த்துடன்**
**கவிதாஞானவாரிதி கோசல்யா சொர்ணலிங்கம் (ஆசிரியை)**
**ஊடகவியலாளர், சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதில் கூறம்மா!

வேலணை வீணா

கடலம்மா! கருணைத்தாய் நீயம்மா! என்றிருக்க
படபடத்துப் பொங்கி எழுந்தது ஏனம்மா?
குஞ்சு குழந்தை முதல் எல்லோரையுமே
கூட்டி அள்ளி வாயில் இட்டது ஏனம்மா?

உன்னை நம்பி உலை வைத்தவர்களை
உள்ளன்போடு உறவாடி வசித்தவர்களை
சின்னா பின்னப் படுத்தியது ஏனம்மா?
சின்னஞ் சிறார் எமக்கு விடை கூறம்மா!

நீயே கதியென உனை நம்பியவர்கள்- சில
நிமிடங்களில் சடலமானது நியாயமா?
இன மொழி நாடென்ற பேதமின்றி - கண்
இமைக்கும் பொழுதில் உயிர் பறித்தாயே!

கருணைத் தாய் என்ற பாச உறவுக்கு -இனி
அருகதை உனக்கு இல்லை அம்மா!
ஒரு விடிவுக்காக நாம் எதிர் பார்த்திருக்க-இன்று
பேரிடியாக வந்த சுனாமியே! வராதே இனி!

சிறுவர் இளையோர் நாம் ஒன்று சேர்ந்தே - நாம்
சோர்ந்திடாமல் எம்மினத்துக்கு உதவி செய்திட
நம்கரம் நமக்குப் பலமாகத் தோள் கொடுப்போம்:
ஏங்கி இருக்கும் எஞ்சியவர்களுக்கு வாழ்வளிப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மண்ணில் வீரம் இன்னும் சாகவில்லை

செல்வி. காயத்திரி கனகலிங்கம்

மண்ணில் வித்தான வித்துக்களே! மாவீரர்களே!
உங்களுக்கு ஈடாக இவ்வுலகில் ஏதுண்டு?
மண்ணின்வீரம் உம்மரணத்திற் பெருமை கொள்ளும்
என்ன இல்லை இந்நாட்டில்?
இயற்கையோடு கொஞ்சிவிளையாடும் இளஞ்சிறார்கள்
கிட்டிப் புள்ளும் கிளிக்கோடும் விளையாட்டு
அருவியில் மீன்களோடு துள்ளிவிளையாடும் சிறார்கள் எங்கே?
வாய்க்காலில் நீந்தும் தென்னை மட்டையோடு
போட்டி போடும் வளையம் உருட்டியோடும்
எம் உடன்பிறப்புகளை விட்டு இங்கு ஓடிவந்தோம்!

வெள்ளைச் சீருடையுடன் பள்ளிசெல்லும் சிறுவர்போல
வயலிலே சீராக நிற்கும் கொக்குகள்
இதுபோல் நடமாடும் நம்மினப் பெண்கள் அங்கே
ஏர்பிடிக்கும் கணவருக்கு ஈடாக நாற்று நடும் பெண்கள்
தலையிலே கஞ்சிப்பானை இடுப்பிலே குழந்தை
காலிலே செருப்பில்லை முட்கள் பஞ்சாக அவளுக்கு
வயலுக்குப் போன கணவன் வீடுவரும்வரை ஆறுதல் இல்லை
வெடிச்சத்தம் கேட்டால் அவளுக்குப் புரியும்
யாரோ ஒருவரின் உயிர் போய்விட்டதென்று!

இப்படிச் செத்துச் செத்து வாழும் ஒருவாழ்க்கை
குடும்பத்தில் திடீரென வட்டமிடும் கழுகுபோல
அந்த விமானம் போட்ட குண்டுவீச்சால் கணவன் பலி
மனைவிக்கோ துணை யாரும் இல்லை
தென்னோலை பின்னுவது மா இடிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிக்குக் களை பிடுங்குவது.. அவளின் வருமானம்
பதினைந்து வயது மகனும் ஒருவயது மகளும்
வறுமைப் பிணியால் மகளை மலேரியா பீடிக்க
மடிந்தது அப் பெண்சிசு.............?
மகனோ புறப்பட்டான் நிம்மதியாக நாம் வாழ
சொந்தநாடும் சுதந்திரமும் வேண்டுமென...
சுதந்திரம் வேண்டி வெளிப்பட்டான் வீரமகன்
இருவருடம் செல்ல ஒருசெய்தி தாய்க்கு

வீரமரணம் மகன் எய்தி நடுகல்லானான்
என்றாலும் தளராது வீரஉணர்வுடன்
அந்த வீரத்தாயும் புறப்பட்டாள்
மண்மீட்புப் பணியைத் தலைமேற்கொண்டு
எமது மண்ணை விட்டுக் கொடுப்பதா?
எமக்காக இல்லாவிட்டாலும் எம் சந்ததியாவது
நிம்மதியாக வாழத் தமிழீழம் வேண்டுமே!



**குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபற்றியவர்களில் சரியான விடை ஏழுதிய ஒருவர் அதிர்ஸ்டலாபச் சீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டு, அவருக்கு ஒரு வருடத்துக்கு எரிமலைல சஞ்சிகை அனுப்பி வைக் கப்படும். போட்டி முடிவு திகதி:10.2.2005**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி இல:1

செல்வி.நிவேதா புவனேஸ்வரன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

இடமிருந்து வலம்

1.இயல்,இசை..... (4)
15.இந்தியத் தேசிய விளையாட்டு (3)
20.சிறுவர்கள் சுழற்றி விளையாடும் பொருள் (5)
35.கடற்கரையில் உண்டு (3)
29..சைலம் (2)

வலம் இருந்து இடம்

6.இலையினைச் சுமப்பது (3)
11.காற்றில் பறக்:கவிடுவது (4)
15.திரள் (3)
29.கடிதம் (3)
32.தீபம் ஏற்ற பயன்படுத்துவது (2)
36.கோவலன் விற்க முனைந்த பொருள் (4)

மேல் இருந்து கீழ்

1.நிரந்தர குடியிருப்பு அற்றவன் (3)
3.12 இராசிகளில் ஒன்று (4)
6.புஷ்பம் (3)
13.இதன் ஒலி கேட்:டால் பாம்பு மயங்கும்(மாறியுள்ளது) (3)
19.குமரனின் எதிர்பாற் சொல் (3)
30.சிற்பம்(மாறியுள்ளது) (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோட்முண்ட் நகரில் இடம்பெற்ற **இன்றே.....இப்பொழுதே**

**செல்வி.மதாங்கினி லோகநாதன்**

புலம் பெயர்ந்து வாழும் இளைஞர்களிடையே ஒற்றுமையையும் தன்னம்பிக்கையையும் படைப்பாக்கத்தையும் வளர்க்கும் வகையில் திருமதி.விக்னா பாக்கியநாதன் அவர்கள் எழுதிய ,,கடுகுவயல்,, ,, அம்மா ,, என்ற நூல்களின் வெளியீட்டுவிழா களம் அமைத்தது. கடந்த 24.10.04 அன்று டோற்மூண்ட் நகரில் ,, இன்றே இப்பொழுதே,, என்ற விஷேட பெயரில் இவ்விழா நடைபெற்றது. சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய இளை ஞர்களின் ,,இளஞ்சூரியன் வழங்கிய இவ்விழா பலரின் பாராட்டைப் பெற்றது. இளையோர்கள் முன்னெடுத்து நடாத்துவித்த இவ்விழா அவர்களின் ஆளுமையையும் தனித்தன்மையையும் நிர்வாகத் திறனையும் எடுத்தியம்பியது.

குறிப்பிட்ட நேரத்துக்கு விழாவை முறைப்படி ஆரம்பித்து, நாம் வாழ்வதற்காக வீழ்ந்த விலைமதிப்பற்ற சொத்துக்களான மாவீர மணிகளுக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதன் பின்னர் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது.பின்னர் சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பொறுப்பாளர் ஏலையா முருகதாசன் அவர்கள் ஒன்றியத்தின் நோக்கம்,இளஞ்சூரியனின் இலக்கு என்பன பற்றிச் சுருக்கமாக எடுத்துரைக்கும் போது, ஒன்றியமானது தமிழீழத் தேசியக் கோட்பாட்டுக்கமையவும் தமிழீழத் தேசியத் தலைவரின் அதியுயர் சிந்தனைக்கு உட்படவும் தனது பாதையையை வகுத்துள்ளது. ஒன்றியத்தின் உறுப்பினர்களும் இளஞ்சூரியன் படைப்பாளிகள் அகத்தின் உறுப்பினர்களும் சுயகட்டுப்பாடும் சுயவொழுக்கமும் உடையவர்களாக இருத்தல் வேண்டும். மேலும் இளஞ்சூரியன் படைப்பாளிகள் அகத்தின் உறுப்பினர்கள் தங்கள் கல்வியில் அக்கறை கொள்வதுடன் பெற்றோர் பெரியோர்களுக்குப் பணிவு உடையவர்களாகவும் நாடு, மொழி, இனப்பற்று உடைவர்களாகவும் வாழ வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நிகழ்வொழுங்கின்படி கவிச்சுற்று, நடனங்கள், நூல்களின் வெளியீடு, விமர்சனம் ஆகியன முறையே இடம் பெற்றன. நிகழ்ச்சிகளின் மத்தியில் தமிழாலயத் தந்தை ,, தமிழேந்தல் ,, திரு.இரா.நாகலிங்கம் ஐயா அவர்களதும் நூலாசிரியரதும் உரைகள் இடம்பெற்றன. ,,கடுகுவயல் - அம்மா,, போன்ற நூல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதாஞானவாரிதி திருமதி. கோசல்யா சொர்ணலிங்கம் வெளியிட்டு, உரை நிகழ்த்தினார். மற்றும் விமர்சன உரைகளை முறையே செல்விகள் கார்த்திகா கனகலிங்கம், சிந்துஜா ஓம்பிரகாஷ், நிவேதா குமாரசுவாமி யாழினி கருணாநிதி தமிழாலய ஆசிரியர் திரு.ஞானகுமாரன் ஆகியோர் திறம்பட வழங்கினர். 2004ல் வெளிவந்த நூல்களை எழுத் தாளர் சில்லையூர் சிங்கராஜா அவர்களும் எரிமலை சஞ்சிகை பற்றிய விமர்சனத்தைக் கவிஞர் மட்டுவில் ஞானகுமாரன் ஆகியோரும் வழங்கினர்.

விழாவன்று உரையாற்றிய அனைவரும் நிகழ்ச்சித் தொகுப்பு, மண்டப ஒழுங்கு , நேரக்கட்டுப்பாடு போன்றவற்றில் இளஞ்சூரியனின் செயற்பாட்டைப் பாராட்டினர். அன்றைய விழாவுக்கு மகுடம் சூட்டும் வகையில் ஜேர்மன்கல்வித் திட்டத்தைக் கருப்பொருளாகக் கொண்ட ஏணிப்படிகள் என்ற நாடகம் இடம் பெற்றது.இந் நாடகத்தை மையமாக வைத்து, நிகழ்த்திய,, எண்ண அரங்கம்,, என்ற நிகழ்வு சபையோரைக் கலகலப்புக்கு உள்ளாக்கியதுடன் சிந்திக்கவும் வைத்தது. ஒட்டுமொத்தமாக எல்லோர் மனதிலும் ,, இன்றே இப்பொழுதே ,, நிகழ்ச்சி சிறந்த இடத்தையும் பல பாராட்டையும் பெற்றுக்கொண்டது. இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்த தமிழாலய ஆசிரியர்கள், மாணவர்கள் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் அனைவரும், மற்றும் அவையோரும் இளைஞர்களின் செயற்பாட்டைப் பாராட்டி ஊக்குவித்துச் சென்றனர். சிறியோர் முதல் பெரியவர்கள் வரை தம் இருக்கையை விட்டு அகலாமல் நிகழ்ச்சியின் சிறப்புக்கு உரமான வலுச்சேர்த்தனர்.

அன்றைய தினம் நூலாசிரியர்களும் ,,கலைவிளக்கு,, ஆசிரியர்களுமான திரு.பாக்கியநாதன் குடும்பத்தினரால் 500 ஒய்ரோ பணத்தொகை செஞ்சோலையின் ஜேர்மனிக்கிளைப் பொறுப்பாளர் செல்வி. சுஜாதா முருகதாசனிடம் அந்த மேடையிலே கையளிக் கப்பட்டது.

சுதந்திர தமிழீழத்தைக் கட்டியெழுப்பி, உலகிலே தலைசிறந்த நாடாக்க முடியும், என்பதை இளஞ்சூரியன் நிரூபித்துள்ளது

.எம் பணி வளர அனைத்துப் பெரியோர்களும் எம்மை வாழ்த்துங்கள்!



பல்கலை வல்லாளர்
தாயகப் பற்றாளர்
கிட்டண்ணா புகழ் நிலைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ளுங்கள்

தொகுப்பு.செல்வி.நிசாந்தி ஜொன் பொஸ்கோ

- உலகிலே பெரும்பான்மையான மக்களாற் பேசப்படும் மொழி எது?
  -- 460 மில்லியன் மக்களால் பேசப்படும் சீனமொழி ஆகும்.
- உலகில் மிகப்பெரிய தீவு எது?
  -- கிறீன்லாந்து
- உலகிலே மிகப்பெரிய வைரச்சுரங்கம் உள்ள கண்டம் யாது?
  -- தென்னாபிரிக்கா
- சூரியனிலிருந்து ஒளியானது புவிக்கு வந்தடையும் நேரம் எவ்வளவு?
  -- 3 நிமிடம் 19 விநாடிகள்
- வெள்ளை யானைகள் அதிகம் உள்ள நாடு எது?
  -- தாய்லாந்து
- கலண்டர் எத்தனையாம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது?
  -- 1582ம் ஆண்டு
- உலகிலேயே மிகப்பெரிய தொலைபேசி நிலையம் எங்கு உள்ளது?
  -- யப்பான்
- எழுத்து வடிவத்தை உருவாக்கியவர் யார்?
  --- எகிப்தியர்
- முதன் முதலில் தேயிலையைப் பயிரிட்டவர்கள் யார்?
  -- சீனதேசத்தவர்
- அடல்வ் ஹிட்லர் எந்த ஆண்டில் பிரதமமந்திரி ஆனார்?
  -- 1933ம் ஆண்டு
- ஐரோப்பாவில் உயர்ந்த மலை எது?
  -- மொன்ற் பிளாங்
- 1945ல் வீசப்பட்ட அணுகுண்டால் அழிக்கப்பட்ட யப்பான் நகர்கள் எவை?
  -- குரோஷிமா , நாகசாகி
- மனித உடம்பில் உள்ள வியர்க்காத உறுப்பு எது?
  -- உதடு
- கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் எப்போது ஒன்றிணைந்தது?
  --- 03.10.1990
- உடலிலுள்ள மிகப்பெரிய உறுப்பு எது?
  -- தோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியக்கலை

செல்வன். சோமாஸ்கந்தா ஸ்ரீகரக்குருக்கள்

அறுபத்து நான்கு கலைகளிற் சிறந்த ஒருகலை ஓவியக்கலையாகும். இக்கலையிலே இருவகை உண்டு. அவையா வன முறையே உயிரோவியம் , நவீன ஓவியம் என்பனவாகும். இவற்றில் நவீன ஓவியத்தைப் பார்க்கும்போது அதில் என்ன வரையப்பட்டுள்ளது என்று எளிதாக எல்லோருக்கும் புரியாது. இவை சிலவேளை விசித்திரமாகவும் விநோதமாகவும் தென்படும். உயிரோவி யம் அப்படியல்ல. உயிரோவியம் ஒரு காட்சியை ஒரு உருவத்தை நேரடியாகவே புலப்படுத்தம் தன்மை கொண்டது. இக்கலையைக் கற் பதற்கு இயற்கையை உணரும் நுண்ணறிவும் இரசனையுணர்வும் அதன்மேல் ஆர்வமும் முயற்சியும் திறமையும் ஒன்றிணைந்திருத்தல் வேண்டும். இக்கலை அழகுணர்வுக்கு விருந்தாகி இன்பமளிக்க வல்லது.

அழகுணர்வினை வாரி வழங்குவதாக இசை, நாட்டியம், ஓவியம்,சிற்பம் என்பன மிளிர்கின்றன. இவ்வாறான கலைகளே அழகுக் கலைகள் எனப்படுகின்றன. ஓவியம் என்பது ஒருகாட்சியை அல்லது உருவத்தை , இயற்கை விந்தைகளைப் படமாக வரைந்து காட்சிப்படுத்துவதாகும். இந்த ஓவியம் கோடுகளினாலும் வர்ணங்களி னாலும் தீட்டப்படுவதன் மூலம் உயிர் பெறுகின்றது. வர்ணம் தீட்டாத உயிரோவியங்களும் உண்டு. நெடுநல்வாடை என்ற சங்க நூலிலே உயிரோவியங்கள் பற்றிப் பேசப்படுகின்றன.

வர்ணம் தீட்டிய ஓவியங்களே இயற்கைத் தன்மையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. உதாரணமாக கடற்காட்சியை வரைய முனையும்போது நீலநிறம் பாவிக்கப்பட்டால் அது உயிர்த்துடிப்பு உள்ளதாக இருக்கும். கண்ணைக் கவர்வதாகவும் இருக்கும். பின் அந்த ஓவியத்துடன் மனதை ஐக்கியப்படுத்தும் போது அந்த ஓவியம் உயிர்பெறும். இக்கலையை கலையுணர்வோடும் கலைஞ னின் எண்ணப் பிரதிபலிப்போடும் ஒருவர் நோக்கின் அவர் கண்களுக்கு அவை உயிருள்ள ஓவியங்களே. இவ்வாறான ஓவியங் களை இரசிக்காதவர்கள் எவரும் உளரோ? பண்டைத் தமிழர் ஓவியக் கலையில் திறமையும் தேர்ச்சியும் பெற்றிருந்தார்கள். சங்கநூல்கள் ஓவியக்கலையின் பழைமையை எடுத்தியம் புகின்றன. சைவக் கோவில்களில் உள்ள ஓவியங்கள், இலங்கை யின் சிகிரியா ஓவியங்கள், இந்தியாவில் அஜந்தா ஓவியங்கள் உலகப்புகழ் பெற்றவை. இக்கலை ஓவியரின் ஆளுமை வளர்ச்சி யோடு மனதை ஒருமுகப் படுத்துவதற்கும் பொறுமைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் உதவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிக்க.... சிந்திக்க

☐ ஒருவர்: யானையும் எலியும் கூட்டம் ஒன்றுக்குப்
பேரூந்தில் பயணம் செய்தன.யானை முதலில்
இலகுவாக ஏறிவிட்டது. ஆனால் எலி யால்
ஏறமுடியவில்லை.
மற்றவர்: ஏன்...? என்ன காரணம்?
ஒருவர். அதுவா? அங்கே நடத்துநராக இருந்தவர் பூனையார்.


☐ தந்தை - தாத்தா என்று எழுதச்சொன்னால் ,,தத்தா,, என்று
எழுதியிருக்கிறாயே.
மகன் : எங்க தாத்தாவுக்கு ஒருகால் முறிந்து போய்விட்டது.
அதுதான் நானும் எழுத்தில் ஒரு,,காலைக்,,
குறைத்துவிட்டேன்.

☐ ஒருவர்: எந்த மழையிலும் நனையாத காய் ஏதும் உண்டா?
வியாபாரி - ஓ இருக்கே. அதுதான் குடைமிளகாய்

☐ சிறுவன் : அப்பா இல்லாத நாடு எந்த நாடு ?
நண்பன்: அது ..தாய்லாந்து. தெரியாதா உனக்கு?

☐ ஒருத்தி : நாநூறில் ,,நானூற,, எடுத்தால் மிகுதி எவ்வளவு?
மற்றவள் : நாநூறில் (நான் நூறை) நா நூறை எடுத்தால்
மிச்சம் 300 தானே.

செல்வி.சுதேசினி கெந்தீஸ்வரன்



பூவே பூவே கார்த்திகைப் பூவே !
கார்மேகம் நோக்கி வளைந்தெழும் பூவே !
கார்த்திகை மாதத்தின் எழுச்சிப் பூவே !
பூபாளம் பாட எழுந்தவர் உறங்கிடும் வேளை
நினைவாய் மலர்ந்தாய் கார்த்திகைப் பூவே !
சுதேசிப்பூவாய் நேசிக்க மலர்ந்தாய்

–செல்வி.சரண்யா தங்கரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரமுள்ள நீரே!
# ஈரமனம் எங்கே?


இயற்கையின் சீற்றமே! உயிர்ப்பலியில் மோகமோ? - உன்
இச்சைக்கு மனித உயிர்தான் விளையாட்டா?
அயர்ந்து தூங்கும் விடியற்காலைப் பொழுதினிலே - நின்
அகோரத் தாண்டவத்தைக் காட்ட வந்தாயா?

கலக்கிய போரின் ஓலங்கள் ஓயாதபோதிலே - இன்று
கொடூரக் கடற் கொந்தளிப்புக் கோரங்கள்
பாலர்முகம் பார்த்தும் பாவி நீ இரக்கமின்றி - மனையில்
புகுந்து விளையாடி உயிர்களைக் குடித்தாயே!

பத்திரண்டு மீற்றர் உயரத்துக்கு மேலே பொங்கிட -உன்
பொறுமைப் பண்புக்கு வந்த சோதனை என்ன?
செத்து மடிந்த உயிர்கள் நிலத்திலே குவியலாக- இந்த
சோகம் பார்க்க நீ ஆவல் கொண்டாயோ?

கடலரசியே! உனக்கும் நாடுபறிக்கும் ஆசையா? - ஆவி
கதறிட உடைமையுடன் பரப்பையும் பிடித்தாயா?
மடங்கள் மாடிகள் மனைகள் என்ற அஃறிணையுடன் - இந்த
மக்களையும் சடலமாக்கிச் சமமாக்கியமை நீதியா?

இலக்கோடு உயிர்நீத்த மாவீரர் தியாகம் உச்சம் - எந்த
இலக்குமின்றிப் பறந்த உயிர்களுக்கு விலையேது?
பலத்த போர் மழையிலும் உயிரைப் பாதுகாத்து வைக்க- இன்று
பரவைக் கடலே! ஈரமனமற்றுப் பறித்தெடுத்தாயே!



நவீனா

சிலநிமிட அதிர்வு
பல்லாயிரம் உயிர் பலி
சுனாமியின் சீற்றம்

கவிதையிலே புகழ்மாலை
கருணைத் தாயாம் கடல்
உயிர்களைக் குடிப்பதாலா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் நாம் என்ன செய்வோம்?

உலகத்துக்கு ஒரு சூரியன்
உலகத்துக்கு ஒரு சந்திரன்

பிள்ளைகளாகிய நாமே உலகம்
எமக்குச் சூரியன்போல் ஒருதாய்
சந்திரன் போல் ஒரு தந்தை

கதறிக் கதறி வலிகள் எல்லாம் தாங்கிப் பெற்று
எம்மை முதலில் அவள் நெஞ்சில் வைக்கையில்
வலிகள் எல்லாம் மறந்து எம்மைப் பார்த்துச் சிரித்த தாய்க்கு
நாம் என்ன செய்தோம்?

சொந்த ஆசைகளைப் பற்றியே சிந்திக்காமல்
எந்நேரமும் எம்மைக் காத்தவள் ...கவனித்தவள்
தன் பசியைப் பற்றிக் கவலைப்படாது
அவளோ பிள்ளைப் பசியை முன்னறிந்து ஊட்டுவாள
பாசத்துக்குத் தாய்போல் யாரோ?

என்பிள்ளை இவ்வுலகில் உயர்ந்தவனாய்
சமுதாயத்திற் சிறந்தவனாய் வாழ நினைத்து
தன் கஸ்டங்களை ஏற்று பிள்ளைக்காக உழைக்கும் தந்தைக்கு
நாம் என்ன செய்தோம்?

தன் அன்பையும் பாசத்தையும் வெளிக்காட்டாது
வாழ்க்கையையும் தேவையானவற்றையும் கற்பிக்கும் ஆசான்
கஸ்டங்கள் வருமுன்னே அதை எதிர்க்கவும் தாங்கவும்
வழி கற்பிக்கும் அறிவுடைத் தந்தைபோல் யாரோ?

நீ எந்தநேரம் வீட்டுக்கு வந்தாலும்
உனக்காகக் காத்து வழித்திருக்கும் ஜீவன்கள்
உனக்கு என்ன துன்பம் நேர்ந்தாலும் துடித்து நிற்கும் ஜீவன்கள்
உன் பக்கமிருக்கும் ஜீவன்கள்... நீ தவறுசெய்தாற் கூட
மன்னித்து நல்வழிகாட்டும் தெய்வங்கள்!
பிள்ளைகளாகிய நாம் இவர்களுக்கு என்ன செய்தோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வோம்?
பணம் கொடுக்கலாமா? பவுணாற் குளிப்பாட்டலாமா?
வீடு கட்டிக் கொடுக்கலாமா?
இவை அவர்களின் தியாகத்துக்கு ஈடாகுமா?
அல்ல அல்ல.... அவர்களின் எதிர்பார்ப்பும் அவையல்ல..

அவர்கள் அபிலாஷைகளை நீ நிறைவேற்று!
நீ ஒரு நல்லபிள்ளையாய் நடந்துகொள்!
அவர்கள் கனவுகளை நிறைவேற்று!
சமுதாயத்தில் ஒரு நல்ல பெயரை எடு!
இவர்கள் இலட்சியத்தை நிறைவேற்று!
உன்பெயருக்குப் பின்னால் தகைமை தாங்கி நில்!
அவர்கள் மனதிலுள்ள துயர்களுக்கு குழிவெட்டு!
அவர்களிடமும் கவலை இருக்கும்.
அதை மறக்க வை!

பெற்றோர் பெயர் சொல்லும் பிள்ளையாய் நீ வாழ முனை!
உன்பெயர் சொல்லும் பெற்றோராய்
அவர்களைத் தலை நிமிர வை!
இதைவிட அவர்களுக்கு நாம் செய்யும்
கைம்மாறு என்ன?



செல்வன்- சுதர்சனன் சிறீஸ்கந்தராஜா

மனித சடலங்கள் அ.்.றிணையுடன்
சுனாமி விழுங்கி உமிழ்ந்தவை
சமரசம் உலாவும் இடம்

யாவரும் ஊரவர்கள்
யாவரும் கேளிர்கள்
சுவாமிக்கும் சுனாமிக்கும்

ஆக்கங்கள் யாவற்றுக்கும் அவரவர்களே பொறுப்பாளிகளாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல்

செல்வி.மயூரி சந்திரபாலன்

மாதங்களில் தனித்துவம் பெற்றமாதம் தை மாதம் ஆகும். இது ,,தை,, என ஓரெழுத்தைக் கொண்ட ஓரெழுத்துச் சொல்லுடைய மாதம் எனலாம். வருடத்தின் முதல் மாதமாகிய ,,தை,, என்றாலே பொங்கல் ஞாபகம் வருகின்றது. தமிழர்கள் மகிழ்ச்சியோடும் புத்துணர்வோடும் கொண்டாடி மகிழும் விழாக்களுள் தைப்பொங்கற் திருநாளும் ஒன்றாகும். இதனை ,உழவர் திருநாள், என்று தொழிலுடன் தொடர்பு படுத்தி விஷேடமாக அழைப்பார்கள்.

பொங்கல் விழா ஒரு சமயவிழா மட்டுமல்ல, ஒரு சமூக விழாவாகவும் ஒரு தேசியவிழாவாகவும் கருதப்படுகிறது. இவ்வுலகுக்கு ஒளி கொடுக்கும் சூரியனை மக்கள் கடவுளாக நினைந்து வழிபாடு செய்கின்றனர். அதேபோல் வளர்ந்து வரும் விஞ்ஞானம் உலகையே இயக்கும் சக்தியாகப் பார்க்கின்றது.

பொங்கற் திருநாளன்று பூமிக்குப் பூசையிடுவது போல் முற்றத்தைச் சுத்தமாக்கிக் கோலமிட்டு அடுப்பு வைத்து, அறுகம்புல் சாத்தி புதுப்பானையில் புத்தரிசியிட்டுப் பொங்கிப் படையலிடுவர்.அத் துடன் பழவகைகளுடன் காய்கறிவகைகளையும் படைத்துச் சூரியனுக்கு நன்றிசெலுத்தி அவனை வழிபடுவார்கள். இயல்பு நிலையிலிருந்து ஏதாவது ஒன்று அதிகரித்துப் பொங்கி வழிவது பொதுவாகப் பொங்கல் எனப்படுகிறது. இந்நிலையிலே ஒவ்வொருவர் மனங்களிலும் மகிழ்ச்சி பொங்கி வழிந்து இன்பமளிக்கின்றது எனலாம். இந்தத் தத்துவத்தைப் பொங்கல் வெளிப்படுத்துகிறது என்பதை யாவரும் உணர்ந்து கொள்ளலாம்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். ஆடியிலே விதை விதைத்து ஐப்பசியில் நீர்ப்பாய்ச்சி அதன் பயனைப் பெற்றுக் கொள்ளும் அறுவடைமாதம் தைமாதம் ஆகும். இந்நாட்களில் இயற்கை பூத்துச் சொரிய பயிர்வகைகள் பயனளிக்க ,இல்லங்களில் உணவு வகைகள் பொலிய மக்கள் மனம் நிறையும். இவ்வேளைகளில் மக்கள் புதிய பல திட்டங்களைத் தீட்டி முன்னேற்றம் காண முயல்வதால் தை பிறந்ததும் வழி பிறக்கின்றது என்றார்களோ எம் ஆன்றோர்கள்.

கதிரவனாலே இயற்கையின் செழிப்பும் உழவர்களின் முயற்சியும் சேர எருதுகளும் விவசாயத்துக்கு முக்கிய ஊன்றுகோலாக அமைகின்றன.. தற்காலத்தில் நவீன இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் பழைய கருவிகளின் பாவனை, வரலாற்றை விட்டு நீங்காதவை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காரணங்களால் எருதுகள் உட்பட ,உழவுக் கருவிகள் தெய்வ நிலையில் உயர வைத்து உழவர்களால் வணங்கப்படுகின்றன. இவ்விடத்தில் ,,செய்யும் தொழிலே தெய்வம் ,,என்ற உயர்ந்த உண்மையைப் போதிக்கும் முதுமொழி உயிர்பெறுகின்றது.

எங்கும் எவரிடமும் எப்பேதமும் காட்டாத இயற்கையை நாம் இறை என்கிறாம். அந்த இயற்கையை வழிபடும் வழிபாட்டு விழாவாகத்தான் தைப்பொங்கற் திருநாள் மகிமை பெறுகின்றது.இயற்கையின் வள்ளற் தன்மைக்கு மனிதன் செலுத்தும் நன்றிக்கடனே பொங்கல் விழா எனில் வியப்பேதும் இல்லை.

---

# முகமூடி

**செல்வி.சிந்துஜா பாக்கியநாதன்**

உன்னைக் கண்டநாட் தொடக்கம்
நீ அதை அணிகின்றாய்!
அத்துடன் பின்னே ஒளிந்திருந்து
நீ யாரென்று எனக்குக் காட்டவில்லை

நீ உன்னை உலகத்துக்கு காட்ட விரும்பால்
உன்னை ஒளித்தாயா?
அல்லது...
உலகத்துக்குப் பயந்து ஒளிந்துள்ளாயா?

உன்னை அடையாளம் காண்போம்..
என்று உனக்குப் பயமா?
உன்னைத் தெரிந்து விட்டால்
உன்னை ஒதுக்கி விடுவோம் என்ற அச்சமா?

ஒருநாள் முகமூடி அணிந்த உன்முகத்தைக்
காட்டுமாறு கேட்டேன் அறிந்து கொள்வதற்கு
அப்போது நீயே எடுத்துவிட்டாய்!
அப்போதுதான் உணர்ந்தேன்
நான் கேட்டிருக்கக் கூடாதென்று..

முகமூடியின் உள்ளே
உன்முகத்தைக் காணவில்லை
அங்கே என்னுடைய முகத்தையே கண்டேன்!
வெட்கித்துப் போனேன் நான்
நீ தான் எனது கூடாத பக்கத்தின்
போலி முகம் என்று
முகமூடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவை

*செல்வன் யதூரசன் குமாரச்சந்திரன்*

☐ ஒருவர் : கரட்டைப் பச்சையாகச் சாப்பிட்டால் கண்ணுக்கு நல்லது என்று எல்லாக் கடையிலும் தேடினேன்.கிடைக்கவில்லை.
மற்றவர் : எல்லாக் கடைகளிலும் கரட் மலிவாகக் கிடைக்குமே.
ஒருவர் : ஓ.. கிடைக்கிறது. ஆனால் சிவப்பாகத்தான் எல்லாம் இருக்கிறது.

☐ டாக்டர்: நான் எழுதித் தந்த மருந்தில் ஏதாவது இம்புரூவ்மெண்ட் இருக்கிறதா?
நோயாளி : ஓ! ..இருக்கே. போனவாரம் 20 ஒய்ரோ விலயான மருந்து இப்ப 30 ஒய்ரோ ஆகிவிட:டது.

☐ ஒருவர் : திரும்பத் திரும்ப என் வீட்டில் திருட்டுப் போகுது சார்!
போலிஸ் : அப்ப திரும்பாமல் ஒரேபக்கமாக இருந்தால் திருட்டு போகாது.

☐ ஒருவர் : என்னடா! இது நேற்று சாப்பிட்ட காப்பிபோல இருக்கு....?
மற்றவர் : இது **XEROX** காப்பி அதுதான்................

☐ ஒருவர் : பஞ்சாப்பில் சப்பாத்தியை எப்படிச் சாப்பிடுவார்கள்??
மற்றவர் : சுட்டுத் தான் சாப்பிடுவார்கள்.

☐ ஒருவர் : பஸ்ஸைப் பின்னால் தள்ளினால் என்ன நடக்கும்?
மற்றவர் : பின்னால் தள்ளினால் பின்தான் நெளியும்.

☐ ஒருவர் :கையை நேராக நீட்டி ...இப்படிப் போனால் சந்தை வருமா?
மற்றவர் : இப்படிக் கையைக் கீழேவிட்டு.. தொங்கவிட்டுப் போனா லும் சந்தை வரும். போங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவற் துளிகள்

செல்வி.சோபிகா ஸ்ரீகரக்குருக்கள்

1. பிரான்சைச் சேர்ந்த லூமியர் சகோதரர்கள் 1895 ம் ஆண்டு நிழற்படக் கருவியைக் கண்டுபிடித்தார்கள்.

2. ஜேர்மனியைச் சேர்ந்த ஜோகனஸ் கூட்டன்பேர்க் என்பவர் 1438ல் நவீன அச்சுயந்திரத்தின் முன்னோடி இயந்திரத்தைக் கண்டறிந்தார்.

3. பென்சிலீனைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் பிளேமிங் என்பவருக்கு மருத்துவத்துக்கான நோபற்பரிசு 1945ல் வழங்கப்பட்டது.

4. தமிழிற் தயாரிக்கப்பட்ட முதற் திரைப்படமான ,கீசகவதம்.,, 1913ல் வெளிவந்தது.

5. மிக நீளமான புகையிரதப்பாதை ரஸ்யாவின் சைபீரியப் புகை யிரதப் பாதையாகும்.இதன் நீளம் 9.313 கி.மீற்றர் ஆகும்.

6. முட்டைகளுள் மிகப்பெரியது தீக்கோழி முட்டையாகும்.இதன் நீளம் 20 செ.மீற்றர். சாதாரண கோழிமுட்டையை விட 30 மடங்கு நிறை கூடியது.

7. 1787ல் டொலர் நாணயம் முதன் முதலில் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

8. 1774 ல் பிரிஸ்ட்லி என்ற ஆங்கிலேயரால் முதன்முதல் ஒக்சிசன் வாயு கண்டுபிடிக்கப்பட்டது.

9. உலகில் மிகப்பெரிய நகரமான டோக்கியோ 1868ல் யப்பானின் தலைநகராக்கப்பட்டது.

10. போருக்காக முதன் முதலில் 1911ம் ஆண்டு விமானத்தைப் பயன்படுத்திய நாடு இத்தாலி ஆகும்.

11. தட்டச்சு இயந்திரம் 1867ல் ஷொல்டன் கிலிடன் என்னும் அமெரிக்கரால் கண்டுபிடிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம்

செல்வன்.யோ.தீபன்

நல்ல வேளை.......அவன் தனியாகத்தான் வீட்டுக்கு வந்திருந்தான்...

,, ஆறுமாதங்களுக்கு முன் எனக்கு ஒரு பிள்ளைதான் பிறந்ததென்று நினைத்துக் கொண்டு உன்னைத் தலை முழுகிவிட்டேன்.எங்கள் முகத்தில் விழிக்காமல் நீ இருந்தால் அதுவே பிறந்த குடும்பத்துக்கும் உன்னைப் பெற்ற பாவிகளுக்கும் நீ செய்யும் கைம்மாறாக இருக்கும்.,,

,,என்று எழுதிய தந்தை சின்னமணியின் கடிதத்தைப் பார்த்து ஒரு பதிலும் எழுதாமல், சரி... அப்படியே ஆகட்டும்! என்பது போல் மௌனமாய் இருந்துவிட்ட குமாருக்கு ....... அவன் அப்பா வைத்தியசாலையில் இருப்பதால் உடனே புறப்பட்டு வரும்படி கடிதம் எழுதிவிட்டு நேற்றிலிருந்து அவன் தனியாய் வருவானா? அல்லது அந்த வெள்ளைக்காரியையும் இழுத்துக்கொண்டு வருவானா? என்று தவித்துக் கொண்டிருந்த சமயம் வண்டியிலிருந்து குமார் மட்டும் இறங்குவதைக் கண்டு பெரிய மனநிம்மதி அடைந்தாள் அவன் அம்மா.

அன்பும் பாசமும் பொங்கிவழிய மகனே! மகனே! என்று அழுதவாறு கமலம் ஓடிப்போய் குமாரைக் கட்டித்தழுவி ....

என்னடா! இவ்வளவு நாளும் எங்கே போனாய்? ஒரு ரெலிபோன் கூட எடுக்கவில்லை. நான் உனக்கு என்ன பாவம் செய்தேன்? அவளைக் கண்டவுடன் என்னை மறந்துவிட்டாய்! பரவாயில்லை...என்ன செய்வது?? எங்கேயடா அவள்? அந்த வெள்ளைக்காரி..?

--- அம்மா கேட்ட கேள்விக்கு என்னால் பதில் கூறமுடியவில்லை. தந்தியில் வந்த செய்தி என்னைக் குழப்பிவிட்டது.

அம்மா! எனது பிரச்சினைகளைப் பிறகு பார்ப்போம்.தந்தியில் அப்பாவைப்பற்றி எழுதியிருந்தீர்கள்! என்ன நடந்தது? என் கண்கள் கலங்கின.

நீ வீட்டைவிட்டு வெளியே போனதிலிருந்து பிரமை பிடித்தது போல் இருக்கிறார். நேற்றுத்தான் வைத்தியசாலையில் இருந்து வந்தார். நீ வந்தால் மறுபடியும் குடும்பத்தில் ஒருவனாக விளங்குவதைக் கண்டால் உன் அப்பாவின் மனம் மாறும் என்று நினைத்து உனக்குத் தந்தி அனுப்பினேன். அந்த அறையில தான் இருக்கிறார். போய்ப் பார்!

குமாரின் கால்கள் அந்த அறையை நோக்கிச் சென்றன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-------- தந்தையாரைக் கண்டவுடன் குமாரின் கண்கள் கலங்கின. அவரின் காலைப் பிடித்து அழுதான். மன்னித்துக் கொள்ளுங்கள்! என்னால தான் இப்படி எல்லாம் நடந்துவிட்டது...என்று கூறியவாறே அவரை நோக்கி னான். தந்தையின் கண்ணிலிருந்து கண்ணீர் பீறிட்டு வெளிப்பட்டு வந்தது. அப்பாவின் கண்ணீரைத் துடைத்துவிட்டு, நான் எங்கே இருந்தாலும் உங்கள் அன்பு என்மேலே குறைவில்லாமல் நிறைந்திருக்கும் என்ற தைரியத்தில் உங்களை விட்டுப்பிரிந்து இருந்தேன். ......என்று சொல்லி விட்டு அன்று நடந்தவற்றை, அன்று பிரிந்துபோக வேண்டிய கட்டத்தைத் தன் கண்முன்னே கொண்டுவந்தான்.

எடியே! ஏய்! கமலம்!! என்ன செய்கிறாய்?
நான் கூப்பிட்டது காதில் கேட்கவில்லையா? எங்கேயடி உன்மகன்?
இன்னும் வீட்டுக்கு வரவில்லையா? எப்ப வருவான்?
நீ என்ன பிள்ளை வளர்த்து வைத்திருக்கிறாய்? உனக்கு ஒன்று போட்டால் தான் எல்லாம் சரிவரும்.....என்று கூறிக்கொண்டு கையை ஓங்கினார். ஒரேஒரு பெடியன் என்று செல்லமாக வளர்த்தேன்.அவன் இப்படிச் செய்துவிட்டான். என்ன செய்வது என்று புரியவில்லை....
ஆத்திரத்துடன் விறாந்தையில் அங்கும் இங்குமாகத் திரிந்தார்.
என்னப்பா நடந்தது? விளக்கமாகச் சொல்லுங்க! இப்படி நீங்க படபடத்தால் ??? எனக்குப் பயமாக இருக்கிறது..குமாருக்கு ஏதாவது விபத்து நடந்துவிட்டதா? என்று பதைபதைத்துக் கேட்டாள் கமலம்.

,, அப்படி நடந்தாலும் பரவாயில்லையே ! வரட்டும் அந்த நாய்!
முளைத்து மூன்றுநாள் ஆகவில்லை ..ஒரு தங்கச்சி இருக்கிறாள் என்ற நினைப்பு இல்லாமல் ....? வரட்டும் ..வரட்டும் அந்த நாய்??

றிங்ங்...றிங்ங்........... அழைப்புமணிச் சத்தம் கேட்டு, கமலம் கண்விழித்து மணிக்கூட்டைப் பார்க்கிறாள். யார் இந்த நேரத்தில்???
மணி இரவு இரண்டாகிறது..என எண்ணியவளாக எழும்பிப்போய்க் கதவைத் திறந்து பார்த்தாள்.
குமர்! அட நீயா? இந்த நேரத்தில் என்ன? எங்கே... நீ முதலிலேயே வந்து படுத்துவிட்டாய் என்று நினைத்தேன்.என்ன ஏதோ மணக்கிறது..
குடித்து விட்டு வந்திருக்கிறாயா? புதிய பழக்கம்??
உள்ளே வா! வாடா ! அப்பா இப்பதான் கத்திவிட்டுப் போனார். சத்தம் கேட்டு எழும்பப் போகிறார் என்று வாய் மூட..... பின்னால் அவன் அப்பா சின்னமணி எள்ளும் கொள்ளும் முகத்தில் வெடிக்க நின்றார்.
தந்தை அவனைக் கண்டதும்.......... அங்கேயே நில்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

,அப்.....அப்பா! பிறந்தநாள் விழா ஓண்டில்...வற்புறுத்தி... குடிக்கச் சொன்னார்கள்.அதுதான் கூடுதலாகக் குடித்துவிட்டேன்.....
கமலா!. இவன் பொய் சொல்கிறான். உனக்கு உன்ன குறை வைச்சேன்? நீ கேட்கிற போதெல்லாம் நைக்..பூமா என்று தட்டாமல் விரும்பியதை வாங்கிக் கொடுத்தேனே.. உனது எதிர்காலத்துக்கு என்று வங்கியில் பணம். நீ கேட்டபோது புதுக்கார்.. நீ கஷ்டப்படக்கூடாது என்று இந்தக் குளிருக்குள்ளேயும் இரண்டுவேலை செய்கிறேன். உன் அம்மாவும் வேலைக்குப் போகிறா.. அதுவும் உனக்காகத் தான்..
எங்களுடைய கஷ்டங்கள் உங்களுக்குத் தெரியக்கூடாது என்று நினைத்து உன்னைச் செல்லமாக வளர்த்தோம்.அதற்கெல்லாம் நீ செய்த நன்றிக்கடன்! போதுமடா சாமி!

கமலம்!!..... கமலம்! ..உன் மகனின் ..கையில் பியர்.. அருகில் வெள்ளைக்காரி.. இவர்கள் இருந்த நிலைமையைச் சொன்னால் சீ..சீ..சீ... நீ.. நீ-------- எனக்குத்தான் பிறந்திருப்பாயோ?? என்ற சந்தேகம் தான் வருகிறது..

வாயை மூடுங்க!!
எனது அம்மாவைச் சந்தேகப்படுகிறீங்க-- தொலைத்துப் போடுவன்!
அப்பா என்ற காரணத்துக்காக விட்டு வைக்கிறன்..நீங்க எனக்கு எல்லாம் செய்தீங்க.ஆனால் ஒன்றை மட்டும் மறந்துவிட்டீங்க. எனக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து உங்களைக் கண்டது இல்லை. சிலநேரம் இரவில் கண்டிருக்கிறன்... காலையில் ஆறுமணிக்கு வேலைக்குப் போனால் மதியம் ஒருமணிக்கு வந்து, பின்பு மாலை ஆறுமணிக்கு அடுத்த வேலைக்குப் போகிறீங்க! இரவு பதினொரு மணிக்கு வீட்டுக்கு வருகிறீங்க! கேட்டால்........பிள்ளையின் எதிர்காலமாம்.உழைக்க வேண்டு மாம்.
அப்பா! நிகழ்காலத்தைத் தொலைத்துப்போட்டு எதிர்காலத்தில் சந் தோஷமாக இருக்கவேணும் என்று உழைக்கிறீங்க. திடீர் என்று நீங்கள் இறந்தால் ?? நம்பிக்கையாக எங்களை வளர்க்கும்போது, நாங்கள் கெட்டுப் போனால்? . தொலைந்ததை எல்லாம் உங்கள் பணம் தருமா?

நான் என்ன படிக்கிறேன்? என்ன செய்கிறேன்? சொல்லுங்கோ!
------- தெரியாது .நீங்களும் அம்மாவும் என்றைக்காவது ஒருநாள் மனம் விட்டுப் பேசியிருக்கிறீர்களா? எங்களுடனும் இல்லை..........
கேட்டால் பிள்ளைகளின் எதிர்காலத்துக்கு பணம் சேர்க்கிறோம். அதுதான் கஷ்டப்பட்டு வேலை செய்கிறோம் என்று சொல்கிறீங்கள்!

நான் ஏன் குடிக்கிறேன் ? வாழமுடியவில்லை.......எனக்கு தேவை அன்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.........அன்பு ! உங்கள் பாசம்தான் வேண்டும். அப்பா! நீங்கள் பணம் சேர்க்க , அம்மா அதை எண்ணிப் பார்க்க, எனது மனம் வெள்ளைக் காரியை நினைக்க,....... அவள் தந்த பரிசுதான் இந்தக் குடி! மது! அவள் எனது ஏக்கத்தைப் புரிந்து கொண்டு எனது பணத்தின் ஆசையால் அன்பு என்ற சொல்லைப் பயன்படுத்தி என்னை இந்த நிலை
மைக்கு கொண்டுவந்து விட்டாள்...... அந்த வெள்ளைக்காரி......??

தந்தை சின்னமணிக்கோ ஒன்றுமே விளங்கவில்லை. கோபத்தில் முகம் சிவப்பாகிவிட.......டே! டேய்! மகனே! நீ........நீ ...........குடித்துவிட்டுக் கதைக்கிறாய்! பரவாயில்லை.......
நான் ஒரு பெண்ணைப் பெற்றிருக்கிறேன். எதிர்காலத்தில் அவளுக்கு நல்லது நடக்கவேணும். நீ வெளியே போ! ...இன்றிலிருந்து நீ எனக்குப் பிள்ளை இல்லை. ஒரு ஆண்பிள்ளை தான் நீ எனக்கு. ஆனால் இன்று உன்னைத் தலைமுழுகுகிறேன். போ!
போய் விடு! அவள் காத்திருப்பாள் வெள்ளைக்காரி..
---- கமலம் இடையில் குறுக்கிட்டு அவன் எங்க போவான்? அவன் சொல்லுறது சரிதான். நாம் பிழைவிட்டு விட்டோம். எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தோம். நிகழ்காலத்தை மறந்துவிட்டோம். பிள்ளைகளை நல்ல மனிதர்களாக வளர்த்தால் அதுவே போதுமப்பா!.

கமலம்! வாயை மூடு! என்றார் அப்பா சின்னமணி. தொடர்ந்து எனக்கு எல்லாம் தெரியும். கதவைச் சாத்திவிட்டு உள்ளுக்கு வா!
அதுதான் தந்தைக்கும் மகனுக்கும் நடந்த கடைசிச் சந்திப்பு. காலங்கள் கடந்தன.
அதன் பிறகு இப்போதுதான்....
சின்னமணி மெல்ல எழுந்து நீண்டகாலத்தின் பின் வந்திருந்த குமாரின் கையைப் பிடித்து,மகனே! என்னை மன்னித்துக்கொள்!
நான் தான் பிழைசெய்து விட்டேன். உங்கள் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளவில்லை. இந்த உலகத்தில் பணம்தான் பெரிசு என்று நினைத்துவிட்டேன். அதோட வருத்தத்தையும் தேடிக் கொண்டேன். கடைசியில் உன்னைப் பார்க்கவேணும் என்று, இப்ப உயிரைக் கையில் பிடித்து வைத்து இருக்கிறன். உங்களுக்காகக்காக என்று, இருக்கிறதை விட்டிட்டு இல்லாத ஒன்றைத் தேடி அலைந்தேன். அன்புத் தங்கச்சி பாசமுள்ள அம்மா... கவனம் தம்பி! அவர்கள் வாழ்வு உன்கை.......யில்......உன்......என்று முனங்கியவாறு அவன் மடியில் சாய்ந்தார்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளஞ்சூரியன்

செல்வி.த.கதிர்சினி

இளஞ்சூரியனே எழுந்து நீ வா!
இன்னல் தவிர்த்துச் சுடரேற்ற வா!
இரும்புக் கவசமாய் இளையோருக்கு உறுதி தா!
அல்லலுறும் மக்களின் அவலம் தீர்க்க வா!

இருள் விலக்கி ஒளி தந்திட வா!
இளஞ்சூரியனே! எழுந்து வா!வா!
இளையவர் பலர் இணைந்து செயலாற்ற
எல்லோருமாக இணைந்திட எழுச்சி தா!

இன்முகத்துடன் பலமுங்கள் ஒன்றுசேர
பாரபட்சமற்று தாய்மொழி தாயகப் பற்றுடனே
புலம்பெயர் தேசத்தில் புதுமைகள் செய்திட
இளஞ்சூரியனே! எழுந்து உதயம் தா!

வருக! வருக! என வரவேற்போமே!
வளரும் உனது வளர்ச்சி எமக்கு அறிவொளி தருமே!
வா! வா! என உனைப்போல் நாமும் வளர்வோமே!
இளஞ்சூரியனே! உனது ஒளியால் உயர்வோமே!

## பொது அறிவுப் புதிர்கள்

- ☐ முதன்முதலில் கி.மு.1370ல் ஒலிம்பிக் விளையாட்டு கிரேக்க நாட்டிலே ஆரம்பமானது.
- ☐ உலகிலேயே பெரிய தீவும் சிறிய கண்டமுமாக விளங்குவது அவுஸ்திரேலியா ஆகும்:
- ☐ உலகில் கூடிய நிலப்பரப்பு உடைய நாடு ரஸ்யா.
- ☐ அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் கிறிஸ்தோபர் கொலம்பஸ் ஆவார்.

செல்வி.கார்த்திகா கனகலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கும் ஆர்வத்தை எப்படி மேம்படுத்தலாம்?

செல்வி.வித்யா பாக்கியநாதன்

,, பறவைகள் பறக்கின்றன, மீன்கள் நீந்துகின்றன. மனிதன் சிந்திக்கின்றான்: கற்கின்றான்.,,(**John Holt** ஆசிரியர்-எழுத்தாளர்)

ஒரு குழந்தை பிறந்த சில வாரங்களின் பின் அதன் வளர்ச்சிக்கு ஏற்ப எல்லாப் புலன்களின் மூலம் தன்சூழலைப் பற்றி அறிய முனைகிறது. தொடர்ந்து அக்குழந்தை தனது அறிவுத் தாகத்தைத் தணிப்பதற்கு ,, மொழி,, என்ற தொடர்புச் சாதனத்தைக் கையாண்டு ஏன்? எதற்கு? எப்படி? என்று ஆரம்பிக்கும் எண்ணற்ற வினாக்கள் மூலம் தன்னைச் சுற்றியும் தன்னைச் சுற்றி வாழ்பவர்களையும் விடாமுயற்சியுடன் அறிய முற்படுகிறது. இதனால் அவர்களது முழுக் கவனத்தையும் தன்பக்கம் ஈர்ப்பதில் விடாப்பிடியாக உள்ளது..

குழந்தைப் பருவத்தில் தானாகவே ஏற்படும் அறிவுப் பசியை எதிர்காலத்தில் எவ்வாறு படிப்படியாக மேலும் வளர்த்துக் கொள்ளலாம்? எனப் பெற்றோர்கள் அறிந்துகொள்ள விரும்புவார்கள்: அதிக அக்கறையும் காட்டுவார்கள். பிள்ளைகளுடைய முன்னேற்றத்துக்குப் பெற்றோரின் ஆதரவும் அக்கறையும் மிக முக்கியமானவை. பொதுவாக ஆதரவு எனும்போது பெற்றோரிடமிருந்து வெளிப்படவேண்டிய அரவணைப்பும், எளிதில் பிள்ளை உணர்ந்து கொள்ளக்கூடிய முறையில் அவர்கள் காட்டும் அன்பும் இதற்குள் அடங்குகின்றன. அதனால் கல்வி கற்பதற்கு ஏற்படும் ஆர்வமும் விருப்பமும் பெற்றோரின் ஊக்குவித்தலைப் பொறுத்தே தங்கியுள்ளது எனக் கூறலாம்.

உதாரணமாக சிறுவயதிலேயே அதாவது மூன்று வயதினிலே குழந்தைகளுடன் பெற்றோர் பொறுமையாக இருந்து, கூடிக்குலாவி உரையாடிப் பழகினால் அக்குழந்தையின் புத்திநுட்பம்,நுண்ணறிவு கூர்மையடையும் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பெற்றோர் தாமே கல்வி தொடர்பான விடயங்களில் ஆர்வம் கொண்டு செயற்பட்டால், அவர்களைப் பார்த்து பிள்ளைகளும் தாம் களிப்புடன் கற்க அக்கறை கொள்வார்கள். பயனுள்ள நூல்களை வாசிப்பதில் ஈடுபடுகின்ற பெற்றோர் தங்களுடைய பிள்ளைக்கு நல்ல உதாரணமாக விளங்குவார்கள். இவ்வாறாகப் பெற்றோர்களைப் பின்பற்றுவதனால் அப்பிள்ளைக்குத் தானாகவே கல்வியில் ஆர்வம் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்பிப்பிக்க ஊக்கப் படுத்தும்போது, அவர்களுடைய திறமைகளைக் கவனித்துச் செயற்படவேண்டும். ஆனால் அவ்வாறான திறமைகளைப் புறக்கணித்துப் பிள்ளையிடமிருந்து, அளவுக்கு மீறிய அல்லது மேலும் வெவ்வேறு திறமைகளை எதிர்பார்த்தால் விளைவுகள் விபரீதமாக அமையும். அது மட்டுமல்ல தாழ்வுமனப் பான்மையை ஏற்படுத்திச் சோர்வடையும் தன்மையையும் உருவாக்குகின்றன எனலாம்.

,, கல்வி தொடர்பான அழுத்தங்களும் அதேநேரத்தில் குடும்பத்தின் சார்பில் ஒத்துழைப்பு இல்லாத நிலையும் கடந்த இருபத்தைந்து வருடங்களில் இளஞ்சமுதாயத்தின் மத்தியிலே தற்கொலைகள் மூன்று மடங்கு அதிகரிப்பதற்குக் காரணங்களாக இருந்தன,,. என்று இந்தியன் ருடே என்னும் பத்திரிகை தெரிவிக்கிறது. ஆகையால் பெற்றோரின் அன்பும் ஆதரவும் ஒரு பிள்ளையின் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது என விளங்கிக் கொள்ள முடிகிறது.

## விருப்போடு மகிழ்வுடன் கற்பதற்குரிய சில வழிகள்

**ஆர்வம்:**

ஒரு விடயத்தைப்பற்றி இலகுவாகக் கற்றுக்கொள்வதற்கு முதலில் அதனை நன்கு கிரகிக்கவேண்டும். சிறுவர்கள் விரும்பிக் கற்கும் போது அவர்களுடைய படிப்பு ஆழமானதாகவும் வளமானதாகவும் தொடர்ந்து செயற்படவைப்பதாகவும் அமையும் என ஆராய்ச்சியாளர் ஆணித்தரமாகக் கூறியுள்ளனர்.

**கற்பவற்றுக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு ஏற்படுத்துதல:**

ஆசிரியரும் எழுத்தாளருமாகிய **Richard .L.Weaver II** என்பவர் வகுப்பறைக் கல்விக்கும் நடைமுறை அனுபவத்துக்கும் இடையில் எப்போது நேரடியான தொடர்பு ஏற்படுகின்றதோ, அப்போதுதான் மின்சாரப் பொறி உண்டாகி விளக்கம் என்ற மின்குமிழை இயங்க வைக்கின்றது, எனத் தெளிவாக நிரூபித்துள்ளார்.

**கிரகிக்க முயற்சி செய்தல்:**

எப்போது நாம் ஏதாவதொன்றைக் கற்றுக் கிரகிக்க முயற்சிக்கிறோமோ, அப்பொழுது நாம் நம்முடைய சிந்தனைகளையும் ஞாபகசக்தியையும் தூண்டிவிடுகின்றோம். மனப்பாடமாக்குதல் ஓரளவு பயனுள்ளதாக இருந்தாலும் அது ஒருவிடயத்தை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு வழி அமைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவனம் செலுத்துதல்:**

கூர்ந்து கவனம் செலுத்துதல் என்பது கற்றுக்கொள்ளுதலின் இருதயம் எனலாம். கவனிக்கும் ஆற்றல் புத்தி நுட்பத்துக்கு முதற்படியாக அமையும். அல்லாவிட்டால் புத்தி நுட்பத்துக்குச் சமமாக அமையலாம் என்ற கொள்கை, கவனம் செலுத்தும் ஆற்றல் எந்தளவு முக்கியம்? என்பதை வெளிப்படுத்துகின்றது.படிப்பு நேரத்தை கொஞ்சம் கொஞ்சமாகத் தொடர்ந்து நீடித்து வருவதன் மூலம் கவனஞ் செலுத்து தலைக் கற்றுக் கொள்ள முடியும்.

பொழிப்புரையினால் ஒருவிடயத்தை அறியக்கூடிய முக்கிய அம்சங்களை மாத்திரம் குறிப்புகளாக எடுக்க முடியும். இவை ஞாபகத்தில் வைத்திருக்கக் கூடியவை.

**தொடர்பு படுத்துதல்:**

ஞாபகங்கள் ,,கொழுக்கிகள்,, போன்றவை என்று , **The Brain book** என்ற நூலில் பீற்றர் றூஷெல்ஸ் என்பவர் கூறியுள்ளார். அதாவது புதிதாகக் கற்றுக் கொள்ளும் விடயங்கள் முன்பு தெரிந்த விடயங்களைக் கொழுக்கி போட்டு இழுப்பதைப்போல் இழுத்து ஞாபகப்படுத்திச் சேர்த்துவிடுகின்றன. இதனால் மனதில் ஞாபகசக்தி மேலும் வளர வழி சமைக்கின்றன.

**படங்கள் மூலம் சிந்தித்தல் - கற்பனை செய்தல்**

கண்ணைக் கவர்கின்ற சித்திரங்கள் ஞாபகத்தில் நிற்கின்றன. அதனால் கற்கவேண்டிய விடயங்களைப் பற்றி, மனதில் நிற்க மறுக்கின்ற விளக்கம் போன்றவற்றை இயன்றளவில் கற்பனைப் படமாக அல்லது வண்ணந் தீட்டிய படமாக உருவகப்படுத்தி மனதில் பதிய வைத்தால் இலகுவாக ஞாபகத்துக்கு வரும்.

**மீள்பார்வை:**

24 மணித்தியாலங்களில் நாம் கற்றுக் கொண்டவற்றில் 80 வீத்தை மறக்கின்றோம். ஒவ்வொரு பாடத்துக்குப் பின்பும் மீள் பார்வை செய்ய வேண்டும். அவை ஒரு நாள் ஒரு கிழமை, ஒருமாதம், ஆறுமாதங்கள் என்ற இடைவெளிகளில் மீண்டும் மீண்டும் பார்த்துப் படிக்க வேண்டும். இப்படிச் செய்வதனால் படித்தவை நூறுவீதம் ஞாபகத்துக்கு வந்துவிடும்: ஞாபகத்தில் வைத் திருக்கவும் முடியும்.

சஞ்சிகையின் ஒழுங்கமைப்பு,
கணனிப் பதிப்பு
விக்னா பாக்கியநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை மாதம் 2005 லிருந்து வெளிவருகின்றது
தமிழ்-யேர்மன் மொழியில்

சர்வதேச புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின்

# இலக்கு



# ZIEL

பத்திரிகை

மக்கள் நலனே அரசின் **இலக்கு**

நல்ல அரசே மக்களின் **இலக்கு**

நல்லாசிரியனே மாணவர்களின் **இலக்கு**

நல்ல மாணவர்களை உருவாக்குவதே ஆசிரியரின் **இலக்கு**

நல்ல கல்வியே சமூக **இலக்கு**

தமிழீழமே தமிழீழ-புலம்பெயர் தமிழர்களின் **இலக்கு**


அந்த இலக்கை நோக்கிச் செல்வதே இந்த இலக்கின் **இலக்கு**

இப்பத்திரிகைக்கான கலை, இலக்கிய, அரசியல், கல்வி, சமூகக்
கட்டுரைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி

*Eelaija Murugathasan*
*Bromberger Str.8*
*46145 Oberhausen*

TEL: 0208 - 607635

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேளாங்கண்ணியில் நேர்த்தியை நிறைவேற்ற இலங்கையில் இருந்து சென்ற கணவன், மனைவி, மகன் பலி

இலங்கையில் இருந்து சிகி... சென்ற கணவன்,
மனைவி, மக...

...ருந்து (எகஸ்பிரஸ்) கடந்த
...றுக்கிழமை கடற்கரை மா...
பராலியா சென்றுகொண்...
அந்தத் தொடருந்தில் நா...
மனைவி எங்களது 3 குழந்...
டன் பயனம் செய்து ...
இருந்தேன். அதில் 1200 ...
ளுக்கு மேல் இருந்தனர்.
புத்தாண்டை கொண்டாடு...
சொந்த ஊர் போய்க் செ...
தனர்.

இதனால் அந்த தொ...
குதூகலமும் கொண்டாட்ட...
இருந்தது. திடீரென ஒரு கிர...
கடந்த...து தொடருந்து ...






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org